# முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு

கீர்த்தனா ஜெயரட்ணம்[1], .க.கஜவிந்தன்[2]

[1,2]மெய்யியல் உளவியல் துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச்சுருக்கம் :** இலங்கையில் தற்பொழுது பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் ஒன்றாக முன்னாள் பெண் போராளிகளின் வாழ்க்கையும் காணப்படுகின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்திலே யுத்த கால கட்டத்தின் போது பெண்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இருந்து பின்னர் இலங்கை அரசினால் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீளவும் தமது சமூகத்திற்கு திரும்பிய பின்னர் சமூகத்துடன் இணைந்து வாழ்வதில் பல்வேறுபட்ட இன்னல்களை எதிர்கொள்கின்றனர். சமூகத்தின் பார்வையில் முன்னாள் பெண் போராளிகள் பற்றிய கருத்துக்களை அறிந்து அத்தகைய சமூகத்திடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது முல்லைத்தீவு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. இதற்காக முன்னாள் பெண் போராளிகள் 120 பேர் மாதிரி எழுமாற்று தெரிவடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் ஆய்வு முறைகளை பயன்படுத்தி ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக பொருத்தப்பாடு, மனவெழுச்சிப் பொருத்தப்பாடு, சுயமதிப்பீடு என மூன்று வகைப்படுத்தி தரவுப் பகுப்பாய்வானது மேற்கொள்ளப்பட்டது. சாதாரணமாக ஒரு மனிதனது மனவெழுச்சி வெளிப்பாடுகள் அவனது நடத்தையாக அமையும். அவ்வாறு இருக்கையில் முதலில் முன்னாள் பெண் போராளிகளது மனவெழுச்சிப் பொருத்தப்பாடின்மை அவர்களை சமூகத்தோடு இணைந்து வாழ்வதை தடுப்பதாக அமையும். அதுமட்டுமல்ல தம்மைப் பற்றி தாம் கொண்டிருக்கும் சுயமதிப்பீடு எதிரானதாக அமையுமிடத்து அதுவும் ஒருவரது நடத்தையை பாதிப்பாக அமையும். அந்தவகையில் இங்கு மனவெழுச்சி மற்றும் சுயமதிப்பீடு போன்ற இரு உளவியல் காரணிகளையும் மையப்படுத்தி சமூக பொருத்தப்பாடு அடையாமைக்கு உளவியல் ரீதியாக இத்தகைய காரணிகளும் காரணம் என இனங் காணப்பட்டு ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வானது ஐந்து அத்தியாயங்களைக் கொண்டு விளங்குகின்றது. முதலாவது அத்தியாயத்தில் ஆய்வின் அறிமுகம், ஆய்வின் நன்மைகள், ஆய்வின் கருதுகோள் என்பன முன்வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் அத்தியாயத்தில் ஆய்வு விடயம் தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகளின் முடிவுகள் முன் வைக்கப்படுகின்றது. அடுத்த அத்தியாயமாக திகழும் மூன்றாவது அத்தியாயமானது ஆய்வு முறையியல் பற்றிப் பேசுகின்றது. நான்காம் அத்தியாயத்தில் முல்லைத்தீவு முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு குறித்துப் பெறப்பட்ட தரவுகளும் அது தொடர்பான பகுப்பாய்வும் அவர்களுக்கு ஏற்படும் உளப் பிரச்சினைகளும் முன் வைக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஐந்தாம் அத்தியாயத்தில் ஆய்வுச் சுருக்கம், முடிவுகள், பரிந்துரைகள், கருதுகோள் பரிசோதனைகள், ஆய்வின் மட்டுப்பாடுகள் என்பன முன் வைக்கப்பட்டுள்ளது. இறுதியாக, ஆய்வானது முன்னாள் பெண் போராளிகளின் கடந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களும், மனவெழுச்சிகளும், உளநலனும், சமூகத்தவரது நிகழ்கால நடத்தைகளும், அவர்கள் சமூக பொருத்தப்பாடு அடைவதில் தடையாக உள்ளமை கண்டறியப்பட்டு அதற்கேற்ப பரிந்துரையளிக்ககப்பட்டு அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள் :** முன்னாள் பெண் போராளிகள், சமூக பொருத்தப்பாடு, மனவெழுச்சிப் பொருத்தப்பாடு

## 1. அறிமுகம்

ஒரு நாட்டின் அபிவிருத்தியானது வெறுமனே அரசியல், பொருளாதார விருத்திகள் மட்டுமல்ல அவற்றை எல்லாம் விட அந்நாட்டில் வசிக்கும் மக்களது உள நலத்திலும் தங்கியுள்ளது. ஒரு மனிதனது உள நலமே ஒரு குடும்பம், சமூகம், பிரதேசம், நாடு என அனைத்திலும் செல்வாக்குச் செலுத்தும். அந்தவகையில் எமது நாட்டைப் பொறுத்தவரை முப்பது ஆண்டுகளாக நிலவிய யுத்த சூழல் மறைந்து ஓர் சமாதான சூழல் தற்பொழுது உருவாகியுள்ளது. யுத்தத்தின் போதான இழப்புக்களானவை ஈடுகொடுக்க முடியாதவை. யுத்தம் முடிந்து இன்று வரையும் உள வடுக்களை சுமந்தபடியே ஒவ்வொருவரினதும் வாழ்க்கை நகர்ந்து செல்கின்றது.

உளவியலானது மனிதனை அடிப்படையாகக் கொண்ட ஓர் துறையாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் வளர்ந்து வருகின்றதும் தற்பொழுது அதிகம் தேவை உடையதுமான ஒரு துறையாக உளவியல் துறை காணப்படுகின்றது. இனம், மதம், மொழி என்பவற்றுக்கு அப்பால் மனித உளத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஒரு துறையே உளவியல். எனவேதான், எனது ஆய்வானது எங்கு உளவியல் முதலுதவி தேவைப்படுகின்றதோ அப்பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

அந்தவகையில், **“முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு”** எனும் தலைப்பில் ஆய்வானது அமைந்துள்ளது. இவ்வுலகைப் பொருத்தவரையில் பெண்கள் எனப்படுபவர்கள் எப்பொழுதும் உயர்வாக மதிக்கப்படுபவர்கள். ஆணுக்கு பெண் சரிசமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க ஒரு சில நாடுகளில் களமுனையில் நின்று ஆயுதமேந்தி போராடும் இராணுவப் பிரிவினுள்ளும் பெண்கள் உள்ளடக்கப்படுகின்றார்கள். இலங்கையிலே அரசுக்கு எதிரான ஓர் அமைப்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் காணப்பட்டிருப்பினும் அவர்களது அமைப்பினுள் யுத்ததின் போது போராடுவதற்கு பெண்கள் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் எனது ஆய்வானது முன்னாள் பெண் போராளிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

சமூக பொருத்தப்பாடு என்பது சமூகத்தின் தேவைகளை பெறுமதியினை அறிந்து கொண்டு அவற்றிற்கேற்ப தன்னை ஏற்றுக் கொள்ளச் செய்யும் ஒரு நிலை ஆகும். இதனை ஒரு உளவியல்சார் செயற்பாடு என வரையறுக்கலாம். இது புதிய நடைமுறைகள் மற்றும் பெறுமதிகளுடன் இணைந்து செயற்பட உதவுகின்றது. சமூக பொருத்தப்பாடு என்பதனை உளவியலின் தொழிநுட்ப மொழியடிப்படையில், “சமூகத்தின் சிறந்த ஒருவராக இணைந்திருத்தல்” என அழைக்கலாம்[1].

ஐக்கிய நாடுகளின் கருத்துப்படி, போராட்டத்திலிருந்து விடுபட்ட போராளிகளை முன்னாள் போராளிகள் எனலாம் (ருஜே1999:52). முன்னாள் போராளிகள் என்பவர்கள் மாநிலங்களில் அல்லது நாடுகளில் இடம் பெறும் யுத்தங்களில் பங்குபற்றியவர்கள் என ஒரு தெளிவற்ற ஒருமித்த வரைவிலக்கணம் காணப்படுகின்றது.

[1] http://www.preservearticles.com/2011082611930/social-adjustment-is-an-effort-made-by-an-individual-to-cope-with-standards-values-and-needs-of-a-society.html

சர்வதேச ரீதியான முரண்பாட்டின் போது போராளிகள் எனப்படுபவர்கள் தேசிய இராணுவப்படையில் வகிப்பவர்களும், நிறுவனங்களால் அடையாளப்படுத்தக் கூடியவர்களும், ஒரு தெளிவான கட்டளை வடிவத்தைக் கொண்டதுமான உள்ளக ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்படுபவர்களுமே முன்னாள் போராளிகள் என அழைக்கப்படுவர்[2]. இந்த வரைவிலக்கணமானது எல்லா நாடுகளிற்கும் எப்பொழுதும் பொருந்தும் என்று கூற முடியாது.

2009ம் ஆண்டு இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமான யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இருந்தவர்கள் 12,007 பேர் அரசாங்க பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. யுத்த காலத்தில் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட 11,000 முன்னாள் தமிழீழ போராளிகளில் தற்போது 800 பேர் மட்டுமே புனர்வாழ்வு நிறுவனங்களில் தங்கியிருப்பதாகவும், ஏனையோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டள்ளதாகவும் சிறைச்சாலைகள், சீர்திருத்த மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார். மேலும் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட போராளிகளின் எண்ணிக்கை 3000 எனவும் மதிப்பீடு செய்யப்பட்டது. இறுதியாக 2012ம் ஆண்டு தரவுப்படி மேலும் 104 புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது[3].

## 2. ஆய்வின் நோக்கம்

மனிதன் செய்யும் ஒவ்வொரு செயற்பாடுகளின் பின்னேயும் கட்டாயம் ஒரு நோக்கம் காணப்படும். அதுவே அனைத்திற்கும் ஊக்கமூட்டியாகக் அமையும். அந்த வகையில் ஒரு ஆய்வும் தனக்கென ஒரு நோக்கத்தினை கொண்டிருக்கும். முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு எனும் தலைப்பில் அமையும் இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை கொண்டுள்ளது.

**பிரதான நோக்கம்**

- முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாட்டினை அறிந்து கொள்ளல்.
- முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாட்டில் உளவியல் காரணிகளின் செல்வாக்கினை அறிந்து கொள்ளல்.

**துணை நோக்கம்**

- முன்னாள் பெண் போராளிகளின் தற்போதைய வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளல்.
- முன்னாள் பெண் போராளிகளின் சமூகம் பற்றிய மனப்பாங்கினை அறிந்து கொள்ளல்.
- முன்னாள் பெண் போராளிகளின் தற்போதைய உள நிலையை அறிந்து கொள்ளல்.

---

2 Peace as disappointment,2002:11

3 சமகாலம், 2012 டிசெம்பர் 18 - 30. துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை, “சமூகப்புறக்கணிப்புக்குள்ளாகும் முன்னாள் பெண் போராளிகள்”

- முன்னாள் பெண் போராளிகளுக்கு இது வரை கிடைக்கப்பெற்ற உளவியல் ரீதியான உதவிகள் எவை என அறிந்து கொள்ளல் போன்ற நோக்கங்களை கொண்டமைந்துள்ளது.

**3. ஆய்வு வினாக்கள்**

எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படும் போதும் எழுகின்ற அல்லது எழுப்பப்படுகின்ற சில வினாக்களுக்கும், சந்தேகங்களிற்கும் விடை பகருவதாகவே அமையும். ஓர் ஆய்வின் இலக்குகளும் அவையாகவே காணப்படும். அந்தவகையில் முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது பின்வரும் ஆய்வு வினாக்களை கொண்டமைந்துள்ளது.

- முன்னாள் பெண் போராளிகள் சமூக பொருத்தப்பாடு அடைவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனாரா?

- முன்னாள் பெண் போராளிகள் சமூக பொருத்தப்பாடடைவதில் உளவியல் காரணிகள் தடையாக உள்ளனவா?

- முன்னாள் பெண் போராளிகள் மனவெழுச்சி ரீதியாக பொருத்தப்பாடு அடைந்து உளநலனுடன் வாழ்கின்றார்களா?

- முன்னாள் பெண் போராளிகளிடையே பயம் என்ற மனவெழுச்சி அதிமாக உள்ளதா? பய உணர்வு சமூக பொருத்தப்பாட்டிற்கு தடையாக உள்ளதா?

- முன்னாள் பெண் போராளிகள் உள நெருக்கீட்டிற்கு உள்ளாகின்றனரா?

**4. ஆய்வு முறையியல்**

ஓர் ஆய்வினை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்படுகின்ற ஆய்வு முறையியல் என்பது மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில்,

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கை நாட்டிலே இன்று அனைவரையும் திரும்பி பார்க்க வைத்த இறுதிக்கட்ட யுத்ததின் அடையாளமாகக் காணப்படும் ஒரு முக்கிய கேந்திர நிலையமே வடக்கு மாகாணத்தினுள் அடங்கும் முல்லைத்தீவு மாவட்டம் ஆகும். தமிழர், முஸ்லீம்கள் சிங்களவர் என வாழ்கின்ற போதிலும் அதிகம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாக இது காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டமானது புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மரிதம்பட்டு, மாதனை கிழக்கு என்ற ஐந்து பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. அந்தவகையில் எனது ஆய்வானது முல்லைத்தீவு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

**ஆய்வு மாதிரி**

2010-2016 தரவுகளினடிப்படையில் மக்கள் தொகையில் 2473 பேர் முன்னாள் போராளிகள் என அடையாளம் காணப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்ந்து

வருகின்றனர். இவர்களிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னாள் பெண் போராளிகள் 120 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**தெரிவு செய்யப்படும் முறை**

ஆய்வுப்பிரதேசமானது ஐந்து பிரதேச செயலகங்களின் கீழ் காணப்படுகையில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களின் கீழிருந்தும் 24 பேர் அளவில் 120 முன்னாள் பெண் போராளிகள் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**தரவு சேகரிப்பு முறை**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு பின்பற்றப்படும் தரவு சேகரிப்பு முறைகளாக,

ை. முதலாம் நிலைத் தரவு

இவ்வாய்விலே ஆய்வளரால் சுய விபரண ஆய்வு வினாக் கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாக்கொத்தானது இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. முதல் பகுதியில் தனிப்பட்ட விபரங்களும், இரண்டாம் பகுதியில் ஆய்வுடன் தொடர்புடைய பொதுவான வினாக்களை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. அத்துடன் அவதானமுறை, நேர்காணல் முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது.

ைை. இரண்டாம் நிலைத் தரவு

இவ்வாய்விலே இரண்டாம் நிலைத் தரவுகளில், சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் மற்றும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தரவுப் பகுப்பாய்வு**

இவ் ஆய்வின் தரவுப்பகுப்பாய்வானது ளுவயவளைவளைஉயட ீயஉமயபந கழச வாந ளுழஉயைட ளுஉநைஉநளள முறையினைப் பயன்படுத்தி கணனி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5. கருதுகோள்**

நேர்விடயங்களை அல்லது தோற்றப்பாடுகளை அறிவியல் அடிப்படையில் விளக்குவதற்குரிய முன்னேற்பாடாக கருதுகோள் விளங்குகின்றது. அந்தவகையில் முல்லைத்தீவு முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு எனும் தலைப்பிலான ஆய்வானது பின்வரும் கருதுகோள்களை கொண்டமைந்துள்ளது.

- முன்னாள் பெண் போராளிகள் சமூகத்துடன் பொருத்தப்பாடு அடைவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள்.

- முன்னாள் பெண் போராளிகள் மனவெழுச்சி ரீதியாக பொருத்தப்பாடடைவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.
- முன்னாள் பெண் போராளிகளின் சுயமதிப்பீடானது குறைவாக காணப்படுகின்றது.

## 6. ஆய்வின் முக்கியத்துவம்

முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு எனும் ஆய்வானது பின்வருமாறு முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

- முன்னாள் பெண் போராளிகள் சமூக பொருத்தப்பாடு அடைந்து உள்ளார்களா என அறிய முடியும்.
- முன்னாள் பெண் போராளிகள் சமூக பொருத்தப்பாடு அடையாமைக்கு உளவியல் காரணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றா என்பதை அறிய முடியும்.
- முன்னாள் பெண் போராளிகளின் மனநிலை தற்பொழுது எவ்வாறு காணப்படுகின்றது என்பதை அறிய முடியும்
- முன்னாள் பெண் போராளிகளுக்கு வழங்கப்பட்ட உளவியல் ரீதியான உதவிகளை அறிந்து கொள்ள முடியும்.
- முன்னாள் பெண் போராளிகளின் மனவெழுச்சிகளை அறிய முடியும்
- முன்னாள் பெண் போராளிகளின் சுயமதிப்பீட்டினை அறிய முடியும்.

## 7. ஆய்வு எல்லையும் மட்டுப்படுத்தலும்

ஒவ்வொரு ஆய்வும் தனக்கென ஓர் எல்லையை கொண்டமைந்திருக்கும். ஓர் ஆய்விலே எல்லை ஒன்று வரையறுக்கப்படாதிருப்பின் அவ்வாய்வானது பரந்து செல்வதுடன் ஆய்வாளனுக்குரிய முடீவம் சரியானதாக அமைந்து விடாது போய்விடும். அந்தவகையில் இவ்வாய்விலே முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு என்பது என்பது ஆய்வுப் பகுதியாக உள்ளது. இதிலே பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இருப்பினும் உளவியல் காரணிகளே பிரதானமாக இங்கு நோக்கப்படுகின்றன. மேலும் முன்னாள் பெண் போராளிகளாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களே உள்ளடக்கப்படுகின்றனர்.
முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு எனும் தலைப்பிலான இவ்வாய்வானது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செய்து முடிக்க வேண்டிய காரணத்தால் ஆய்வு எல்லையானது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள எல்லா முன்னாள் போராளிகளையும் ஆய்வுக்குட்படுத்தவில்லை. தெரிவு செய்யப்பட்டவர்கள் கூட எழுமாற்று அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டார்கள். மேலும் வேறு இடங்களிலும் முன்னாள் பெண் போராளிகள் இருப்பினும் முல்லைத்தீவு மாவட்டத்தை மட்டும் தெரிவு செய்தமையால் வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்ளோடு ஒப்பிட்டு நோக்க முடியவில்லை.

மேலும் ஆய்வுக்காக மாதிரிகளை தெரிவு செய்யும் போதே சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. முன்னாள் பெண் போராளிகள் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள பின்வாங்கினர், ஆய்வுக்குட்படுவதால் பிரச்சினைகளை எதிர் கொள்ள

வேண்டி ஏற்படும் என தரவுகளை தர மறுத்தனர். வினாக் கொத்தினை கொண்டு தரவினை சேகரிப்பது மிகவும் கடினமாக காணப்பட்டது. தடுப்பு முகாமில் அவர்களது உளநிலையை அறிந்து கொள்ளவும் வினாக் கொத்து வழங்கப்பட்டிருந்தது. அதனால் இம்முறையை அவர்கள் ஏற்க சற்று தயங்கினர். மேலும் தகவலை பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்ந்து முல்லைத்தீவு சென்று வருகையில் அதிக தூரம் மற்றும் நேரம் செலவிட வேண்டி இருந்தது.

மேலும் தகவல்கள் பெற்றுக் கொள்ளல் என்பது ஆய்வாளருக்கு பாரிய சவாலாகவே காணப்பட்டது. ஆய்வாளர் முன்னாள் பெண் போராளிகள் பற்றி ஆய்வு செய்வதனை சிலர் அச்சுறுத்தி பயமுறுத்தினர். மேலும் ஆய்வுக்குட்பட்டவர்களில் சிலர் வினாக்கொத்தினை நிரப்பினால் போதும் என்ற நோக்கோடு நிரப்பினரே தவிர உண்மைத் தகவல்களைத் தர அஞ்சினர். ஆய்வாளர் தெரியாத ஒரு நபராக இருப்பதால் மிகவும் தயங்கினர். கலந்துரையாடலின் போதும் அனைவரையும் ஒன்றாய் சந்தித்தமையால் மனம் திறந்து பேசுவதற்கு தயங்கினார்கள். அனைவரது மனநிலையும் ஏதாவது பிரச்சினை தமக்கு ஏற்பட்டு விடுமோ என காணப்பட்டது.

**8. ஆய்வுப்பெறுபேறு**

இன்று பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் முன்னாள் பெண் போராளிகளின் பிரச்சினைகளும் ஒன்றாக காணப்படுகையில் அவர்கள் சமூகத்துடன் பொருத்தப்பாடு அடைய முடியாது உள்ளனரா என்பதனை அறியும் நோக்கோடு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்கூறப்பட்ட ஆய்வு முறையியல் அடிப்படையில் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் அடிப்படையில் முன்னாள் பெண் போராளிகள் சமூகத்துடன் பொருத்தப்பாடு அடைவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்பது நிரூபிக்கப்பட்டது.

அதாவது முன்னாள் பெண் போராளிகள் புனர்வாழ்வுக் கழகங்களிற்கு சென்று மீளவும் சமூகத்திற்கு திரும்புகையில் சமூகத்தவரிடையே இலங்கை இராணுவம் பற்றி கொண்டிருக்கும் ஓர் எதிரான மனப்பாங்கானது முன்னாள் பெண் போராளிகளை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றமையும், அவர்களை தவறாக நோக்குவதனாலும் முன்னாள் பெண் போராளிகளால் சமூகத்துடன் பொருத்தப்பாடடைந்து வாழ்தல் என்பது கடினாக காணப்படுகின்றது.

மேலும், யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் அவர்களிடையே பாரிய உளப்பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளமை அறியப்பட்டது. முன்னாள் பெண் போராளிகள் தம்மைப்பற்றி பிறரிடம் பகிர்ந்து கொள்ளவே தயங்குகின்ற நிலை காணப்படுகின்றனர். ஆய்வாளர் அவர்களுடன் கலந்துரையாடும் போது அவர்கள் மனம்விட்டு உரையாடத் தயங்கியமை அதனை எடுத்துக்காட்டியது.

சிலர் தம்மை முன்னாள் பெண் போராளி என அடையாளப்படுத்த தயங்கி நிற்கும் நிலையும் காணப்படுகின்றது. உளவியல் ரீதியாக பயம், தாழ்வான சுயமதிப்பீடு, எதிரான மனப்பாங்கு, கவலை போன்றன அதிகம் காணப்படுவதும் அறியப்பட்டது. மேலும்

யுத்தத்தின் போது பல்வேறுபட்ட இழப்புக்களை சந்தித்தமையானது நெருக்கீட்டிற்கு பின்னரான உளவடுவை அவர்களிடம் ஏற்படுத்தியுள்ளமையும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

எனவே ஆய்விலிருந்து முன்னாள் பெண் போராளிகள் சமூக பொருத்தப்பாடு அடைவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்ற கருதுகோளும், முன்னாள் பெண் போராளிகள் மனவெழுச்சி ரீதியாக பொருத்தப்பாடு அடைவதில் சிரமத்ததை எதிர்கொள்கின்றனர் என்ற கருதுகோளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. முன்னாள் பெண்போராளிகளின் சுயமதிப்பீடானது தாழ்வானதாக காணப்படுகின்றது என்ற கருதுகோளானது கலந்துரையாடல் மூலம் பரிசோதிக்கப்பட்ட காரணத்தால் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக அமைந்தது.

**9. முடிவுரை**

முன்னாள் பெண் போராளிகளின் சமூக பொருத்தப்பாடு எனும் தலைப்பிலான இவ்வாய்வானது ஆய்வின் அறிமுகத்துடன் ஆரம்பமாகி முன்னாள் பெண் போராளிகள் பற்றிய விடயங்கள், சமூக பொருத்தப்பாடு பற்றிய வரைவிலக்கணங்கள், மேலும் ஆய்வின் நோக்கம், கருதுகோள், ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வுப் பிரதேசம், ஆய்வின் பயன்கள், ஆய்வுப் பிரச்சினை என்பன கூறப்பட்டது.

மேலும், மேற்கூறப்பட்ட ஆய்வுமுறையியலடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டு கணனி முறையைப்பயன்படுத்தி தரவுப்பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. தரவுப்பகுப்பாய்வு அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளானவை வரைபுகள் மற்றும் அட்டவணைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டன.

இறுதியாக முன்னாள் பெண் போராளிகள் சமூக பொருத்தப்பாடு அடைவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்ற முடிவைப் பெற்றுக் கொண்டு, எதிர்கால ஆய்விற்கான பரிந்துரைகளும், சிபாரிசுகளையும் கூறி ஆய்வுக்கட்டுரையானது முற்றுப் பெறுகின்றது.

**10. பரிந்துரைகள்**

- **முன்னாள் பெண் போராளிகளுக்கான பரிந்துரைகள்**

i. ஆற்றுப்படுத்தல் சேவையினை அணுகுதல்

ii. தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எதிரான மனப்பாங்கை மாற்றுதல்.

iii. சுயமதிப்பீட்டை வளர்த்துக் கொள்ளல்

iv. தொழில் மற்றும் கல்வியில் ஈடுபடுதல்

v. பிரச்சினை ஏற்படுத்தும் இடங்களில் இருந்து பின்வாங்குதல்.

- **சமூகத்திற்கும் இலங்கை அரசிற்குமான சிபாரிசுகள்**

○ முன்னாள் பெண் போராளிகள் சமூகத்தோடு இணைந்து வாழ விரும்புகையில் அவர்களுக்கு சமூகத்தில் ஆதரவு கிடைக்கக் கூடியதும், அவர்களது உணர்வுகளை சரியான முறையில் பேணும் நிகழ்ச்சித் திட்டங்களை அரசு முன் வைக்க வேண்டும்.

○ முன்னாள் பெண் போராளிகளது தேவைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய அரசானது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அனைவரும் ஒன்று சேர்ந்து முன்னாள் பெண் போராளிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.
- பாதுகாப்பு பொறிமுறைகளை கற்பித்தல்.
- சட்ட வழிகாட்டுதல்களை தெரியப்படுத்துதல். முன்னாள் பெண் போராளிகளுக்கு அவர்களது உரிமை மற்றும் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான சட்ட வழிகாட்டல்களை உருவாக்க வேண்டும்.
- உளவியல் ஆலோசனை வழங்கல்.
- முன்னாள் பெண் போராளிகளுக்கான மறுவாழ்வு செயற்றிட்டம் தனியாக உருவாக்கப்பட வேண்டும்.
- சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்கான பயிற்சிகளை அளித்தல்.

- **உளவளத்துணையாளருக்கான சிபாரிசுகள்**

- முன்னாள் பெண் போராளிகளின் உளநிலையை அறிந்து அதற்கேற்ற வகையில் அவர்களை ஆற்றுப்படுத்தலிற்குள் உட்படுத்த வேண்டும்.
- முன்னாள் பெண் போராளிகளின் பொருத்தப்பாட்டு நிலையையை அறிந்து அவற்றிற்கேற்ப சிகிச்சை அளிக்க வேண்டும்.
- முன்னாள் பெண் போராளிகளை எக்காரணிகள் அதிகம் சமூகத்துடன் பொருத்தப்பாடு அடைவதை தடுக்கின்றது என்பதை இனங்கண்டு அவற்றை சரி செய்ய வழிப்படுத்தல் வேண்டும்.
- முன்னாள் பெண் போராளிகளிடம் காணப்படும் மனவெழுச்சிகளின் தன்மையை அறிந்து அதற்கேற்ப நுட்பமுறைகளை பயன்படுத்தி அவற்றை சீர் செய்ய வேண்டும்.
- முன்னாள் பெண் போராளிகளிடையே வாழ்வதற்குரிய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

## 10. உசாத்துணை

**நூல்கள் :**


- அடேல் பாலசிங்கம். (2002).: *சுதந்திர வேட்கை.* பெயர்மக்ஸ் பதிப்பகம். இங்கிலாந்து.
- அலெக்ஸ் ஒஸ்டின். மார்டினா ப்பிஷர். நோபேர்ட். ரோப்பர்ஸ். (2007).: *இனக்குழும அரசியல் மோதுகையை மாற்றுநிலைப்படுத்தல்.* தரன்ஜி அச்சகசாலை. இலங்கை.
- தமிழினி,*ஜெ.: ஒரு கூர்வாளின் நிழலில்.* இலங்கை பதிப்பு, சிவகாமி ஞாபகார்த்த நிறுவகம், கிளிநொச்சி.
- துஷ்யந்தினி,க.: *சமூக புறக்கணிப்பிற்கு உள்ளாகும் முன்னாள் பெண் போராளிகள்.* சமகாலம் 2012, பக்கம் 43-47.
- ஜெயராசா,சபா.*ஆய்வு முறையியல்.*(2006).யாழ்ப்பாணம்.

**ஆய்வுக்கட்டுரைகள் :**

- கிறேஷா,. மஷேலின் அறிக்கை. (1996).: *சிறுவர் ஆயுதமோதலின் தாக்கம்.*
- வெற்றிச்செல்வி.: *ஈழப் போரின் இறுதி நாட்கள்.* தோழமை வெளியீடு.சென்னை.

- ரிரோல் பேர்டினஸ். குமார் ரூபசிங்க. பாக்கியசோதி, சரவணமுத்து. ஜயதேவ உயன்கொட. நோபேட் றொபேர்ஸ். (2004).: *இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் இடர்பாடுமிக்க திருப்புமுனையில்.*
- Amarnath Amarasingam.(2013).: *A history of Tamil diaspora politics in Canada.* International centre for ethnic Studies. Colombo.
- Aliff,S,M.(2014).: *Peace Building in Post - war Societies.* Proceedings of the third international symposium.Oluvil.(p.105)
- Anders Nilsson.(2005).: *Reintegrating Ex - Combatants in post - conflict societies.*
- Allden K, Jones L, Weissbecker I, Wessells M, Bolton P, Betancourt TS. A. (2000). *Mental health and psychosocial support in crisis and conflict:* Report of Mental Health Working Group.
- Annan J, Brier M, Aryemo F. From "rebel" to "returnee": *Daily life and reintegration for young soldiers in northern Uganda*. Journal of Adolescent Research. 2009;24:639–667.